சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 199/2015

C/W

அசல் வழக்கு எண். 400/2015

**PW1 சக்தி கண்ணன்** **09.10.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1ம் வாதி செல்வி எனது தாயார் என்று சொன்னால் சரிதான், 2ம் வாதி எனது சகோதரி என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் பெயர் சிவசாமி என்றால் சரிதான். சிவசாமியின் வாரிசுகள் தான் வாதிகள் என்றால் சரிதான். சிவசாமியின் தகப்பனார் பெயர் நாச்சிமுத்து கவுண்டர் என்றால் சரிதான். சிவசாமியின் தாயார் சீரங்கம்மாள் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு உடன் பிறந்த அண்ணன் பாலசுப்பிரமணியம் என்று சொன்னால் சரிதான். எனது தந்தை வழி தாத்தா நாச்சிமுத்து கவுண்டர் 14.12.2002 தேதியில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டரின் மனைவி சீரங்கம்மாள் 19.01.2011 தேதியில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் 18.07.2009 தேதியன்று காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் தகப்பனார், தகப்பனாரின் பெற்றோர்கள் தகப்பனாரின் சகோதரர் பாலசுப்பிரமணியம் ஒரு பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரம் 12.12.1988 அன்று பொது குடும்ப சொத்தை பொருத்து பதிவு செய்யப்பட்ட பாகபத்திரம் என்றால் சரிதான் (வாசாஆ 5). பாகப்பத்திரப்படி சொத்துக்களானது 3 செட்யூல் சொத்துக்களாக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். பாகபிரிவினை செய்யப்பட்ட போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். எனது சகோதரி எப்போது பிறந்தார் என கேட்டால் குறிப்பிட்டு தெரியவில்லை

ஆனால் எனக்கு 2 வருடத்திற்கு முன்பு பிறந்தார். எனது சகோதரி பாக பத்திரத்திற்கு முன்பே பிறந்துவிட்டார். எனது சகோதரியும் பிறந்த தேதி பொருத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பாகபத்திரத்தில் ஏ செட்யூல் சொத்துக்களாக ஒதுக்கப்பட்ட சொத்து எனது தாத்தா நாச்சிமுத்து கவுண்டருக்கும் அவரது மனைவி சீரங்கம்மாளுக்கும் கூட்டாக கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தானது கஞ்சம்பட்டி கிராமம் க.ச.எண்.191/2 என்ற காலையில் புஞ்சை ஏக்கர் 2 பூமியும் அந்த காலையில் உள்ள கிணற்றில் 6 நாட்களில் 2 நாட்களுக்கு தண்ணீர் பாத்தியம் கண்டு எழுதப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் பாக பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். பாகபத்திரத்தில் நாச்சிமுத்து கவுண்டருக்கும், சீரங்கம்மாளுக்கு ஏ செட்யூலாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்து சர்வசுதந்திரமாக பாத்தியப்பட்ட சொத்து அது ஆண்டு அனுபவித்து வரவேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இனிமேற்படி அவரவர் பாத்தியங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் சுவாதீனம் அனுபவம் செய்து கொண்டு பயிர் செய்து கந்தாயம் செலுத்தி சர்வ சுதந்திரமாய் பாத்தியம் அடைந்து ஆண்டு அனுபவித்து வரவேண்டியது என கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த பாகபத்திரத்தில் உயிர் சம்மந்தமே தவிர பொருள் சம்மந்தம் ஏதும் இல்லை என கண்டுள்ளது என்றால் சரிதான். பாகபத்திரம் எழுதி 14 வருடங்கள் கழித்து 14.12.2002 எனது தகப்பனாரின் தகப்பனார் நாச்சிமுத்து கவுண்டர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டர் இறந்து 1 மாதத்திலேயே அவரது மனைவி சீரங்கம்மாள் பாகபத்திரத்தில் கண்ட பொதுவில் பாத்தியப்பட்ட சொத்தில் புஞ்சை ஏக்கர் 1.34 சொத்தை 2ம் பிரதிவாதிக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துவிட்டடார் என்றால் சரிதான். அது 08.01.2003

அன்று அவ்வாறு செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட செட்டில்மெண்ட் எழுதிய தேதியில் இருந்து 6 வருடங்கள் கழித்து எனது தகப்பனார் சிவசாமி 18.07.2009 அன்று காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் செட்டில்மெண்ட் ஆவணத்தை பொருத்து எந்தவொரு வழக்கும், எந்த கோரிக்கையும் எழுப்பப்படவில்லை என்றால் எனது தகப்பனார் வருவாய் துறையில் பட்டாவை மாற்ற மனு கொடுத்தார். எனது தகப்பனார் மனு கொடுத்த விவரத்தை எனது பிராதிலோ பிரமாண பத்திரிக்கையிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அதை பொருத்து எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சீரங்கம்மாளின் இன்னொரு மகனான 1ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியன் செட்டில்மெண்ட் ஆவணத்தை பொருத்து வழக்கோ கோரிக்கையோ வைக்கவில்லை என்று சொன்னால் 2005 ல் அவருக்கு வரவேண்டிய பாத்தியத்தில் அவரது 2 வது மனைவியின் மகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துவிட்டார். 26.08.2009 தேதியன்று சீரங்கம்மாள் தனக்கு பாத்தியப்பட்ட மீதமுள்ள சொத்துக்களை 2 ம் பிரதிவாதிக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்பட்டிருந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. எனது பெரியப்பா எழுதி கொடுத்த சொத்தை எனது தந்தையின் தாயார் நகராஜ்க்கு எழுதிவைத்துவிட்டார் அது தவறாகும். என்னிடம் காட்டப்படும் 26.08.2009 தேதியிட்ட செட்டில் மெண்ட் ஆவணம் நாகராஜ்க்கு சீரங்கம்மாள் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான் ஆனால் அது பொய்யானதாகும். 07.04.2013 தேதியில் நாகராஜ் 2 செட்டில்மெண்ட் மூலம் பெற்ற சொத்தை 3 ம் பிரதிவாதிக்கு கிரயம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். 07.04.2013 தேதியில் கிரயம் பெற்ற தேதியில் இருந்து கனகராஜ் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல அவரது பெயருக்கு

பட்டா மாற்றப்பட்டது என்றால் சரிதான். நான் என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் 3 ம் பிரதிவாதி பெற்ற சொத்து மேய்ச்சல் நிலம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாசாஆ 3 ல் தோப்பு பூமி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு அருகில் உள்ள தோப்பு என்னுடையது. என்னிடம் காட்டப்படும் வாசாஆ 2 ல் சொத்துவிவரத்தில் மேற்படி பங்கு பூமியில் உள்ள தென்னை மரங்கள் 16 ம் அவற்றின் பலன்களும் மேற்படி பூமிக்கம் பொது கிணற்றுக்கும் மேற்படி 1366/1988 பாகசாசனத்தில் குறிப்பிட்டுள்ள படி போகவர உள்ள தடபாத்தியம் மாமூல்படியும் என குறிப்பிடப்பட்டுள்ளது என சொன்னால் சரிதான். ஆனால் அது பொதுவான தடத்தில் தென்னை மரங்கள் வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரத்தை என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை, அதனால் அந்த சொத்து மேய்ச்சல் நிலம் என்று போட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி கிரயம் பெற்று 5 வருடமாக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கனகராஜ்க்கு சொத்து விற்கபட்ட விவரம் எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி